**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 25/2017**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–2 வடிவேல் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.03.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) எனது மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் சொத்து எந்த வருடம் கிரையம் வாங்கப்பட்டது என்றால் 1958ல் வாங்கப்பட்டது. தற்போது எனக்கு வயது 43. எனது மாமனார் 1958ல் கிரையம் வாங்கி பிறகு தனிப்பட்ட சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருப்பதாக சொல்லும் விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவர் சொல்லி தெரியும், எனக்கு விபரம் தெரியும். அசல் கிரைய ஆவணம் காணாமல் போய் விட்டதாக சம்பந்தமாக புகார் ஏதாவது கொடுத்தோமா என்றால் இல்லை. கிரையம் வாங்கும் போது எனது மாமனாரின் சகோதரர் ராமசாமிக்கு 13 வயது என்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது மாமனார் சொல்லி தெரியும்.

2) எனது மாமனார் மற்றும் சிறிய மாமனார் வயதை குறிக்கும் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1958ம் வருடம் எனது சிறிய மாமனார் ராமசாமிக்கு வயது 22 என்றால் சரியல்ல. கலையரசி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் ராமசாமியின் மூத்த மகள் என்றால் அது பற்றி தெரியாது. அ.வ.எண்.242/2016 யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் நல்ல பெருமாள், ராமசாமி மற்றும் சிலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனது மனைவி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது மனைவிக்கு எதன் அடிப்படையில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் எனது மாமனார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் மற்றும் பட்டாவின் அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்டது.

3) எனது மனைவி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பின்னிட்டு எதற்காக நல்லபெருமாள் ராமசாமிக்கு எதிராக வழக்கு போட்டார் என்றால் ராமசாமி வகையறா இடையூறு செய்ததால் தனது மகளுக்காக வழக்கு தாக்கல் செய்தார். நான் சொல்வது பொய் என்றும் தான செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி நல்லபெருமாளுக்கு தெரியாமலேயே கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நல்லபெருமாளுக்கு இளையராணியை தவிர மற்றும் சில வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்தது போக மற்ற வாரிசுகளுக்கு சொத்து எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் எனது மனைவிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய்த்துறையில் பட்டா எண்.1041 என்ற ஆவணமே

வழங்கப்படவில்லை என வருவாய்த்துறையால் தெரிவிக்கப்பட்ட பின்னிட்டு எனது மனைவி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**